# GOUNDERS IN BUSINESS

உறவுகளை வளர்ப்போம் உறவுகளை வளர்ப்போம்

## நமது அமைப்பானது

Section 8 - ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும்

தனி நபருக்கோ அல்லது குழுவுக்கோ எந்தவித

**இலாப நோக்கமில்லாமல்** (Non- Profit) செயல்படும் அமைப்பு

## GiB – யின் உறுப்பினர்களுக்கான நிபந்தனைகளும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளும்

1. கொங்கு வேளாளர் சமூகத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.

2. கொங்கு வேளாளர் சமூகத்தை சார்ந்தவரை மட்டுமே திருமணம் செய்தவராக இருக்க வேண்டும்.

3. ஒரே கூட்டத்தில் திருமணம் செய்தவராக இருக்கக் கூடாது.

4. ஈரோடு மாவட்டத்தில் வீடு அல்லது அலுவலக முகவரி கட்டாயமாக இருக்க வேண்டும்.

5. ஈரோடு மாவட்டத்தில் இருக்கும் GiB சேப்படர்களில் ஏதாவது ஒரு சேப்படரில் மட்டுமே உறுப்பினராக இருக்க வேண்டும்.

6. GiB –ல் நமது கொங்கு சமுதாயத்தின் வரலாறு மற்றும் பண்பாட்டை காப்பதற்காக மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும், மேலும் நமது அடுத்த தலைமுறைக்கு நமது பண்பாட்டை எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

7. GiB –யின் அனைத்து நிகழ்வுகளிலும் தவறாமல் கலந்து கொண்டு மற்ற சக உறுப்பினர்களிடம் நல்ல உறவை வளர்த்துக்கொண்டு நம்பகத்தன்மையை அதிகப்படுத்தி அதன் மூலம் தொழில் வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ளவும் வேண்டும்.

8. GiB –யின் WhatsApp மற்றும் **Telegram** குழுவில் உங்கள் தொழிற்சார்ந்த பதிவுகளை மட்டுமே பதிவு செய்ய வேண்டும். (நாள் ஒன்றுக்கு மூன்று பதிவுகள் மட்டுமே செய்ய வேண்டும்)

9. பிறந்தநாள், திருமணநாள் மற்றும் இதர தனிப்பட்ட வாழ்த்துக்களை சம்பந்தப்பட்ட உறுப்பினரின் **Personal Window** –வில் மட்டுமே பகிர்ந்து கொள்ள வேண்டும்.

10. கட்சி சார்ந்த தகவல்களையோ மற்ற அரசியல் சம்பந்தமான தகவல்களையோ மற்ற மதம் சார்ந்த தகவல்களையோ, பண்டிகைகளுக்கான வாழ்த்துக்களையோ நமது குழுவில் பகிரக்கூடாது

11. மற்ற அமைப்புகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை குறித்தோ அல்லது மற்ற அமைப்புகளில் தகவல்களையோ நமது குழுவில் பகிரக்கூடாது.

12. தொழில்வாய்ப்புகள் உங்கள் மீது இருக்கும் மதிப்பையும் நம்பகத்தன்மையும் பொறுத்தே கிடைக்கும் அப்படியல்லாமல் எந்த ஒரு உறுப்பினரையும் அவரின் விருப்பமின்றி கட்டாயப்படுத்துவது கூடாது.

கையெப்பம்

13. உங்களுக்கு கிடைக்கும் தொழில் வாய்ப்புகளுக்காக கமிஷன் பெறுவதோ தருவதோ கூடாது அப்படி கமிஷன் கொடுப்பது தெரிய வந்தால் உங்கள் மீது நூஷ்ய நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.

14. நீங்கள் யாருக்காவது தொழில் வாய்ப்பை கொடுத்து அதாவது நமது உறுப்பினர் யாரிடமாவது பொருட்கள் வாங்கியதற்காகவோ அல்லது சேவை பெற்றதற்காகவோ கொடுக்க வேண்டிய பணத்தை அந்த பரிமாற்றம் துவங்குவதற்கு முன்னதாக நீங்கள் பேசிக்கொண்ட வரைமுறைகளின் படி அந்த கால அவகாசத்திற்குள் கட்டாயமாக செலுத்தி இருக்க வேண்டும் அப்படி அல்லாமல் அதிகபட்சமாக 2 பேரிடம் இருந்து எழுத்து வடிவில் புகார் வரும் பட்சத்தில் உங்கள் மீது **GiB** நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.

15. ஆனால், பண பரிவர்த்தனைகளுக்கு **GiB** எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

16. நிர்வாகத்தில் இருப்பவர்களின் அனுமதி இல்லாமல் **GiB** -யின் **Logo** -வை பயன்படுத்துவதோ அல்லது **GiB** -யின் பெயரில் தனி **WhatsApp**, **Telegram**, **Facebook** போன்ற அனைத்து விதமான சமூக வலைதளங்களிலும் எந்த ஒரு குழுவையும் உருவாக்குவது கூடாது.

17. **GiB**-யின் உறுப்பினரை நீங்கள் உறுப்பினராக இருக்கும் எந்த ஒரு அமைப்பிற்கோ அல்லது நீங்கள் உறுப்பினராக அல்லாத அமைப்பிற்கோ உறுப்பினராக்க முயற்சிக்கக் கூடாது.

18. **GiB**-யின் உறுப்பினர்களை வைத்து நிர்வாகத்தினரின் அனுமதி இல்லாமல் எந்த ஒரு குழுவையும் உருவாக்க முயற்சிக்கக் கூடாது.

19. **GiB**-யின் உறுப்பினர்களின் தொடர்பு எண்களையோ அல்லது அவர்களின் தகவல்களையோ மற்ற அமைப்புகளுக்கோ அல்லது தனிநபருக்கோ பகிர்வது கூடாது.

20. நமது **GiB** அமைப்பைப் பற்றியோ அல்லது **GiB**-யின் உறுப்பினரை பற்றியோ மற்றவர்களிடம் தரக்குறைவாக பேசுவதோ, அவதூறுகளை பரப்புவதோ கூடாது.

21. உங்களுக்கு **GiB** பற்றி ஏதாவது சந்தேகங்களோ கருத்து வேறுபாடுகளோ இருந்தால் **GiB** -ன் மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது சந்தேகங்களை அனுப்பி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி **GiB** யின் உறுப்பினரிடமோ அல்லது உறுப்பினர் அல்லாதவர்களிடமோ கலந்துரையாடினால் அந்த உறுப்பினர் மீது **GiB** நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.

22. **Pro+ Member** ஆக இருப்பவர் ஒரு வருடத்தில் **16/20 KG** மீட்டிங்கில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் தொடர்ச்சியாகவோ அல்லது இடைவெளி விட்டோ 4 விடுப்புகள் எடுத்துக் கொள்ளலாம் ஐந்தாவது விடுப்பு எடுத்து விட்டால் அதற்குப்பின் வரும் **K G** மீட்டிங்குகளில் கட்டணம் ரூபாய் 800 செலுத்தி கலந்து கொள்ளலாம். 16 மீட்டிங்கில் கலந்து கொள்ளாவிட்டால் அடுத்த வருடம் **Pro** உறுப்பினராக மட்டும் சேர்ந்து கொள்ள முடியும்

23. **Pro Member** ஆக இருப்பவர் ஒரு வருடத்தில் **6 KG** மீட்டிங்குகளில் கலந்து கொள்ளலாம் அதற்கு மேல் **KG** மீட்டிங்கில் கலந்து கொள்ள வேண்டுமென்றால், ஒவ்வொரு மீட்டிங்கிற்கும் ரூபாய் 1000 செலுத்தி கலந்து கொள்ளலாம். 2 **KG** மீட்டிங்கில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் இல்லை என்றால் அடுத்த வருடம் நீங்கள் உறுப்பினராக தொடர முடியாது

24. நீங்கள் **KG** மீட்டிங்கில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் உங்களது ரத்த பந்தமோ அல்லது நமது சமுதாயத்தை சார்ந்த உங்களது தொழில் பங்குதாரரோ **KG** மீட்டிங்கில் உங்களுக்காக கலந்து கொள்ளலாம்.

கையெப்பம்

25. உங்களிடம் வாங்கப்படும் தொகைக்கு ஒரு ஆண்டிற்கு, **KG** மீட்டிங்குகளும், சிறப்பு பேச்சாளர் கூட்டங்களும், தொழில் ஆலோசகர்கள் கூட்டங்களும் மேலும் நமது சமுதாய முன்னேற்றத்திற்கான கலாச்சாரம் சார்ந்த நிகழ்ச்சிகளும் நமது பண்பாட்டை அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்வதற்கான நிகழ்ச்சிகளும் உறுப்பினர்களின் தொழில் வளர்ச்சிக்கான பயிற்சிகளும், கருத்தரங்குகளும், மேலும் உறுப்பினர்களின் சுய முன்னேற்றம் மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான அனைத்து விதமான நிகழ்ச்சிகளும் நிர்வாகத்தினர்களின் முடிவின்படி நடத்தப்படும்.

26. **Industrial Visit, Activity Trip , Social , Special Training programs for Individual development or Business Development** இதுபோன்று இதர நிகழ்வுகளில் தனிநபரின் விருப்பத்தின் பேரில் கட்டணம் செலுத்தி கலந்து கொள்ளலாம்.

27. **GIB** சம்பந்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் பொழுது மற்ற அமைப்புகளில் பெயர் பதிக்கப்பட்ட சட்டையையோ அல்லது மற்ற அமைப்புகளில் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகைகளையோ, பின்களையோ அணிந்து கொண்டு பங்கு பெறுவது கூடாது.

28. உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் **GiB Logo** பொறிக்கப்பட்ட கடிகாரத்தை உங்களது வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ பயன்படுத்த வேண்டும் வேறு எந்த தவறான வழிகளிலும் அதை பயன்படுத்த வேண்டாம்.

29. **GIB** -யின் **Logo** பொறிக்கப்பட்ட ஸ்டிக்கரை உங்களது இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் ஒட்டி இருந்தால் அந்த வாகனத்தை ஏதாவது காரணத்திற்காக நீங்கள் மற்றவருக்கு விற்கும் பொழுது அந்த ஸ்டிக்கரை கட்டாயமாக அப்புறப்படுத்திவிட்டு கொடுக்கவும்.

30. **GIB** -யின் வளர்ச்சிக்கு தேவையான கருத்துக்களும் ஆலோசனைகளும் கட்டாயமாக அனைத்து உறுப்பினர்களிடமிருந்தும் முழு மனதாக வரவேற்கப்படுகிறது அப்படி நீங்கள் கூறும் ஆலோசனைகளை **GiB** -யின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

31. நமது **GiB** அமைப்பிலிருந்து ஒரு சில சொந்தங்கள், இதே நோக்கத்திற்காக, தனியாக மற்றொரு அமைப்பை (**G-Elite, KiB**) உருவாக்கியுள்ளார்கள். இந்த அமைப்புகளில் ஏதேனும் ஒன்றில் (ஒரே நோக்கமுள்ள இரு வெவ்வேறு அமைப்புகளில் நீங்கள் உறுப்பினராக இருக்கும் பொழுது உங்களது பணமும் நேரமும் விரயமாவதற்கு வாய்ப்புகள் அதிகம்) நீங்கள் உறுப்பினராக சேர்ந்து நமது குடும்ப உறுப்பினர்களையும் அதே அமைப்பில் (நாம் எந்த அமைப்பில் உறுப்பினராக இருக்கிறோமோ அதே அமைப்பில்) உறுப்பினராக இணைத்து, அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு நமது பொன்னான நேரத்தை அந்த அமைப்பின் வளர்ச்சிக்காகவும் நம் சமுதாய மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தலாம்.

32. புதிய **GiB** உறுப்பினர்கள் ஒருவருடம் உறுப்பினர் ஆன பிறகு மட்டுமே **GiB** கிரிக்கெட் **Touranament** போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், அவர்கள் **GiB** கிரிக்கெட் கிளப் (**GCC**) யில் இணைந்த உடனே பாக்ஸ் கிரிக்கெட் மற்றும் ஃப்ரெண்ட்லி போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

33. **GiB** நிகழ்ச்சிகளில் மது அருந்துவது முற்றிலும் தடை. விதிமீறல் கண்டறியப்பட்டால் உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பெயர் : ------------------------------------------

குலம் : ------------------------------------------

தொலைபேசி எண்: ----------------------------------------------------

முகவரி:------------------------------------------------------------------

------------------------------------------------------------------ கையெப்பம்